செ. கு. எண்: 011 நாள்:31.01.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு ஓ. பன்னீர்செல்வம்** அவர்களின்

அறிக்கை -31.1.2017

காஷ்மீர் மாநிலம், குப்வாரா பகுதியில் இந்திய நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ராணுவ வீரர், மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கே.வெள்ளாங்குளம் கிராமம், Gunner திரு. கண்ணன் என்ற தாமோதரகண்ணன் என்பவர் 28.1.2017 அன்று ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி, மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 30.1.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் Gunner திரு. கண்ணன் என்ற தாமோதரகண்ணன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் திரு. கண்ணன் என்ற தாமோதரகண்ணன் அவர்களின் குடும்பத்திற்கு இருபது லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஓ. பன்னீர்செல்வம்**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**